செய்தி வெளியீடு எண் : 427 நாள் : 02.03.2023

**செய்தி வெளியீடு**

சமூகத்தின் விளிம்பு நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டில் மிகுந்த அக்கறை உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று (02.03.2023) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள், நிதி ஒதுக்கீடு மற்றும் அவற்றின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழிசெல்வராஜ் அவர்களது தலைமையில் நடைபெற்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக இவ்வின மக்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்து அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மற்றும் பழங்குடியினர் நல திட்ட அலுவலர்களுடன் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டங்களுக்கான நிதி முழுமையாக செலவழிக்கபட்டு அதன் பயன் மக்களை விரைந்து சென்றிடுவதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் – திருமதி லட்சுமி பிரியா, இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல இயக்குநர் – திரு. த.ஆனந்த், இ.ஆ.ப., பழங்குடியினர் நல இயக்குநர் திரு. ச.அண்ணாதுரை, ம.தொ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in